**25 பாலங்களை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டம் -2023**

---

25 பாலங்ளை மீள்நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடிரசிற்கும் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 886 ஆம் இலக்க 2014 சனவரி 30 ஆந் திகதிய கடன் உடன்படிக்கையின் உறுப்புரை I உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துதல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலப்பகுதி என்பன**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் தற்போதைய போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சாகிய அப்போதைய பெருந்தெருக்கள் , துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தும் முகவராகும். மேற்கு, சப்ரகமுவ, கிழக்கு தெற்கு, வடமேற்கு, மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் பயணிகள் மற்றும் பொருட்களின் போக்குவரத்திற்கான அதிகரித்த தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கும் வாகன செயற்பாடுகள் மற்றும் வீதி பராமரிப்பு கிரயம், பிரயாண காலம், விபத்துக்கள் என்பவற்றை குறைப்பதன் மூலம் தொடர்புபட்ட பிரதேசங்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதற்குமாக தொடர்புபட்ட பிரதேசங்களில் நடைபாதைகளைக் கொண்ட இரண்டு நிரல்களுடனான 25 பாலங்களை மீள்நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். தொகுதி 01, 02 மற்றும் 03 ஆகிய மூன்று கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 4,632 மில்லியனுக்குச் சமமான யு.எஸ் டொலர் 35.41 மில்லியனாக இருந்ததுடன் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தினால் நிதியளிப்பதற்கு உடன்பட்டுள்ளது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2015 செப்தெம்பர் 07 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2017 செப்தெம்பர் 05 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்திசெய்தல் திகதி தொடக்கத்தில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கும் பின்னர் 2023 திசெம்பர் 31 ஆந் திகதிக்கும் நீடிக்கப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறைகளை கண்காணிப்பது ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் கண்ட உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள ஏதாவது முக்கியமான குறைபாடுகளை உள்ளடக்கிய ஏனைய விடயங்களுக்கு மத்தியில் முக்கியமான

கணக்காய்வு காண்புகள் தொடர்பாக ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களுக்கு நான் தெரியப்படுத்துகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடு/ கணக்காய்வு அவதானிப்புக்கள் | தொகை<br><br>ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாள ரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 62 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றுமொரு சொத்து கொண்டிருக்கும் தொகையில் உள்ளடக்கப்பட்டிருந்தாலே தவிர எந்தவொரு காலப் பகுதிக்கான பெறுமானத் தேய்வுக் கட்டணமும் மிகையில் அல்லது பற்றாக்குறையில் தேறப்படுதல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டில் ரூபா 1.35 மில்லியன் தொகையான பெறுமானத்தேய்வினை அறிந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1.35 | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி நடத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 07 ஆம் பிரிவின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் எக்காலப்பகுதிக்கு தொடர்புபடுகின்றனவோ அக்காலப்பகுதிக்கான கணக்கீட்டுப் பதிவேடுகளில் பதியப்பட்டு நிதிக்கூற்றுக்களில் தேறப்படுகின்றன. எனினும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (PMU) சார்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 05 மில்லியன் தொகையான சொலவுகள் PMU இன் மீளாய்வாண்டிற்கான செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே PMU இன் செலவுகள் அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | 05 | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. | -மேற்படி- |
| (இ) | தலவதுகொட வீதி மீதான ¾ ஆம் இலக்க பாலத்தின் கீழான அகழ்தல் வேலையின் கொடுப்பனவுக்காக PMU இற்கும் நிர்மாணக் கம்பனிக்குமிடையே ஒரு பிணக்கு காணப்பட்டது. பிணக்குகள் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி பிணக்கு இலக்கம் 02 மற்றும் 03 இற்காக ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கோரிக்கைகள் மற்றும் நிதிக் கட்டணங்களாக ரூபா 9.4 மில்லியன் தொகையினை செலுத்துவதற்கு PMU அறிவுறுத்தப்பட்டது. எனினும் மேற்கூறிய | 9.4 | DAB இனால் அங்கீகரித்த தொகை மற்றும் அதற்கான தாமதக் கட்டணங்களும் 2024 இல் சமர்ப்பித்த IPA இலக்கம் 30 மற்றும் 31 மற்றும் IPA 31 இல் உள்ளடக்கப்பட்டிருந் | அனைத்து பொறுப்புக்களுக்குமாக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொடுப்பனவிற்காக ஏற்பாடு செய்வதற்கு PMU நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | தது. ஆகவே IPA 30 இலுள்ள தொகையானது நிதிக்கூற்றுக்களில் நிலுவைக் கொடுப்பனவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ஈ) | ஒரு உடன்படிக்கை மற்றும் வரிசை அமைச்சிடமிருந்தான அங்கீகாரம் இல்லாது பீரதான பாலங்களை நிர்மாணித்தல் (MBC) செயற்திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டில் PMU இனால் நிதி மாற்றப்பட்டிருந்தன. MBC செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் முடிவுறுத்துவதற்கு முன்னர் குறித்த தொகையை அறவீடு செய்வதற்கு PMU நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. குறித்த தொகையானது நிதிக்கூற்றுக்களில் இன்னும் காட்டப்படுகின்றது. | 10 | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள் தொடர்பாக முறையான புலனாய்வினை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (உ) | வெளிநாட்டு நன்கொடையளிக்கும் முகவராண்மைக்கு 2022 யூன் 08 ஆந் திகதியிலிருந்து 2022 செப்தெம்பர் 27 ஆந் திகதி வரையும் பதினான்கு இடைக்கால கொடுப்பனவு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் முகவராண்மையானது மீளாய்வாண்டின் இறுதி வரையும் அத்தொகையினை செலுத்தியிருக்கவில்லை. ஆகவே ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகளின் படி தாமதக் கட்டணத்தை செலுத்தும் இன்னல் உள்ளது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எனினும் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகளோ அல்லது வெளிப்படுத்தல்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 252 | இணங்கிக்கொள்ளப்படுகின்றது | அனைத்து நிகழ்வுகளும் கொடுக்கல் வாங்கல்களும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் பதியப்படுதல் வேண்டும். |
| (ஊ) | காணி சுவீகரிப்பு இழப்பீட்டிற்கான வட்டியானது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒரு பொறுப்பாக அடையாளங்காணப்பட்டிருக்கவில்லை. | 20.6 | இணங்கிக்கொள்ளவில்லை. காணி சுவீகரிப்பு தொடர்பான எந்த கொடுப்பனவும் 2023 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த அனைத்து வேலைகளும் பணிப்பாளர் (காணி) RDA இனால் மேற்கொள்ளப்பட்டது. ஆகவே நிதிக்கூற்றுக்களில் | அனைத்து நிகழ்வுகளும் கொடுக்கல் வாங்கல்களும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் படி பதிவுசெய்தல் வேண்டும். |

பொறுப்புக்கள் குறிப்பிடப்படவில்லை. எனினும் செயற்திட்டத்தினை முடிவுறுத்தும் வரை காணிச் சுவீகரிப்பு கொடுப்பனவானது செயற்திட்டத்தின் முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களில் சேர்த்துக்கொள்ளப்படும்.

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் / கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின்சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 9.3 ஆம் உப உறுப்புரை | செயற்திட்ட கண்பாணிப்பு குழு ஆகக் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டும் என்பதனை வரிசை அமைச்சின் செயலாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது ஒரு கண்காணிப்பு குழு கூட்டம் மாத்திரம் நடைபெற்றதுடன் 2019 இலிருந்து 2023 வரை எட்டு கண்காணிப்பு குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றன. | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசி கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38(இ) இன் பிரகாரம் செயற்திட்டங்களில் காணப்படுகின்ற நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தாபித்து அவ்வாறான முறைமையின் செயற்திறனை கண்காணிப்பதற்காக காலரீதியான மீளாய்வினை மேற்கொள்ள வேண்டியதுடன் அதற்கிணங்க எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தொகுதி 03 இன் கீழான நான்கு பாலங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த காலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தக்காரர் காலநீடிப்புச் செய்யப்பட்ட காலத்திற்குள் வேலைகளைப் பூர்த்தி செய்திருக்காததுடன் | இணங்கிக்கொள்ளப்பட்டது. | ஒப்பந்த உடன்படிக்கையின் படி EOT மதிப்பீட்டினைப் பூர்த்திசெய்வதற்கு செயற்திட்ட பணிப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்த உடன்படிக்கையின் படி மேலதிக தாமதத்திற்காக EOT பொறியியலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்த உடன்படிக்கையின் 8.7 ஆம் பிரிவின் பிரகாரம் IPCs களை நன்கொடையாளர்களுக்கு அனுப்பபுவதற்கு முன்னர் அவற்றிலிருந்து 2022 யூலை 07 ஆந் திகதி வரையான தாமதக் கட்டணமாக ரூபா 27 மில்லியனை கழிப்பதற்கு PMU நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | தொகுதி - 03 இற்கான நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கையில் வேலை கொள்வோராக RDA இன் தலைவரும் ஒரு சபை அங்கத்தவரும் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த உடன்படிக்கையின் 8.8 ஆம் பிரிவின் படி RDA இன் பணிப்பாளர் நாயகத்தினால் இடைநிறுத்தல் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. ஆகவே தொழில்தருனர் சார்பாக பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பாக ஒரு பிரச்சினை காணப்பட்டது. ஒப்பந்தத்தை இடைநிறுத்துவதன் அடிப்படையில் EOT இனை வழங்குவதற்கும் இடைநிறுத்தல் காலத்தின் போது ஏற்பட்ட விலை முரண்கள் மற்றும் பாதிப்புக்களுக்கு செலுத்துவதற்கும் தொழில்தருனர் பொறுப்பாக உள்ளார். | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. | இவ்விடயம் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தல் முறையான புலனாய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு நன்கொடையாளரிடமிருந்து சம்மதத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு உட்பட்டு அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 25 பாலங்களின் தொடக்க பட்டியலில் 13 புதிய பாலங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அவ்வாறான மாற்றங்களுக்கான சமம்தத்தினை மீளாய்வாண்டின் இறுதி வரையும் PMU இனால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக்கொள்ளவில்லை. பாலங்களின் தொடக்க பட்டியலிலிருந்து 08 பாலங்கள் தொகுதி 01 இல் உள்ளடக்கப்பட்டிருந்தன. தொகுதி 02 இலிருந்தும் தொகுதி 03 இலிருந்தும் சில பாலங்கள் திருத்தப்பட்டு பாலங்களின் திருத்திய பட்டியல்களின் விபரம் நன்கொடையாளருக்கு தெரிவிக்கப்பட்டது. கேள்வி ஆவணங்களை அங்கீகரித்ததன் மூலம் திருத்திய தொகுதி 03 மற்றும் தொகுதி 02 இற்காக தனித்தனியாக நன்கொடையாளரின் சமமதம் பெற்றுக்கொள்ளப்பட்டது | அவ்வாறான மாற்றங்களுக்காக நன்கொடையாளரின் முறையான சம்மதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகவே உரிய ஆவணத்தை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் செயற்திட்டத்தில் காணப்படுகின்ற ஒப்பந்த முகாமைத்துவத்திற்கு செயற்திறனான ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 3.2 முறைமைகளும் கடப்பாடுகளும்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தொடக்கத்தில் செயற்திட்டத்தின் காலம் 2014 சனவரி 30 இலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையுமான 05 ஆண்டுகளாக இருந்தது. எனினும் செயற்திட்ட காலம் 2023 திசெம்பர் 31 வரைக்கும் இரண்டு தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தன. கடந்த 10 ஆண்டுகள் காலத்தில் மொத்த கடனில் 66 சதவீதமான ரூபா 4,128 மில்லியனுக்குச் சமமான ரூபா 6.6 மில்லியன் குவைத் தினார்கள் (KWD) பயன்படுத்தப்பட்டிருந்தன. தொடக்க திட்டத்தின் படி செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு PMU இற்கு முடியாதிருந்ததன் விளைவாக இலங்கையின் பொருளாதார சிக்கல் காலத்தின் போது செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் நன்கொடையாளரும் 2022 யூன் 26 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் கடனை இடைநிறுத்தியிருந்தார். ஆகவே PMU இன் செயற்திறனற்ற முகாமைத்துவத்தின் காரணமாக செயற்திட்டத்தின் எதிர்பார்த்த விளைவுகள் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | உடன்படவில்லை. பல்வேறு தவிர்க்க முடியாத காரணங்களினால் செயற்திட்டத்தில் தாமதங்கள் ஏற்பட்டன.<br>• பலவீனமான செயலாற்றலின் காரணமாக தொகுதி 01 இற்கான ஆலோசகரினை நிறுத்துதல்<br>• KFAED இனால் சம்மதம் தெரிவிப்பது மறுக்கப்பட்டதனால் தொகுதி 02 இன் சிவில் வேலை ஒப்பந்த பெறுகைகளை மீளவும் மேற்கொள்ளுதல்.<br>• கொவிட் - 19 தாக்கங்கள்<br>• பொருளாதார பிரச்சினை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நிர்மாண முகாமைத்துவ பலவீனங்கள் தொடர்பாக முறையான புலனாய்வினை நடாத்த வேண்டியதுடன் செயற்திட்டத்தில் செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை காணப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | எந்த எழுத்துமூல உடன்படிக்கையும் இல்லாது வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து PMU இனால் 2018 ஆம் ஆண்டில் ரூபா 1.95 மில்லியன் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்துதுடன் RDA உடனான எதுவித உடன்பாடும் இல்லாதும் வரிசை அமைச்சின் செயலாளரிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாதும் கடன்களை பதிவழித்தல் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. | உடன்படவில்லை. இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைத் தீர்த்துவைப்பதற்காக RDA இடமிருந்து 1.95 மில்லியன் தொகையான கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அக்கடன் RDA இற்கு செலுத்த வேண்டிய கடனாக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் அடையாளங்காணப்பட்டிருந்தது. மொத்த கடன்களும் RDA இனால் தீர்த்துவைக்கப்பட்டுது என அறிவிக்கப்பட்டதனால் ரூபா 1.93 மில்லியன் தொகையான செலுத்த | நாட்குறிப்பு வவுச்சர்களை பதிவுசெய்வதற்கு முன்னர் கணக்காளர் முறையான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். நிதி அறிக்கையிடலின் தவறான நடத்தை தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்திரோயகத்தர் முறையான விசாரணைகளை நடாத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டிய அக்கடன் மீதியானது கடன்களை பதிவழித்தல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. | |
| (இ) | தொகுதிகள் 1, 2, 3 மற்றும் 4 இன் கீழ் 158 காணித் துண்டுகளை சுவீகரிப்பதற்கு PMU திட்டமிட்டிருந்த போதிலும் 81 காணித் துண்டுகளின் விபரங்கள் மாத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆகவே ஒவ்வொரு காணித் துண்டின் பரப்பளவு தொடர்பான விபரத்தினை PMU பேணியிருக்காததுடன் எஞ்சியுள்ள காணித்துண்டுகளின் விபரமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படவில்லை. மேற்கூறிய காணித்துண்டுகளின் அனைத்து விபரங்களும் RDA இன் காணிப் பிரிவின் காணப்படுகின்றது. | செயற்திட்ட பணிப்பாளரினால் அனைத்து தகவல்களும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | காணிச் சுவீகரிப்பிற்கான வட்டியைச் செலுத்துவதற்கு ரூபா 40.58 மில்லியன் கிரயம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 27.74 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டியவையாக எஞ்சியிருந்தது. 2023 ஆம் ஆண்டில் காணிச் சுவீகரிப்பிற்கான இழப்பீட்டினையும் வட்டியையும் செலுத்துவதற்கு ரூபா 5 மில்லியன் பாதீட்டு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் இழப்பீடு மற்றும் வட்டி எதனையும் செலுத்துவதற்கு PMU இனால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படவில்லை. 2023-03-31 வரையும் PMU செயற்பட்டிருந்தது. இந்த 03 மாதங்களின் போது இழப்பீட்டினை செலுத்துவதற்காக கட்டுநிதிகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை. 2023-03-31 ஆந் திகதியின் பின்னர் அனைத்து இழப்பீட்டு கொடுப்பனவுகளும் RDA இன் DDG (காணி முகாமைத்துவம்) இனால் மேற்கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்கீட்டு காலப்பகுதிக்கான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பதிவு செய்யப்படுதல் வேணடும். |
| (உ) | நன்கொடையாளரினால் கடன் பண அளிப்புக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியதனால் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 2023 மார்ச் 31 ஆந் திகதி PMU மூடப்பட்டிருந்த போதிலும் அலுவலக கட்டிடத்தின் 2023 மார்ச் மாதத்திலிருந்து 2024 மார்ச் மாதம் வரையான மாதாந்த வாடகையாக ரூபா 5.81 மில்லியன் தொகையினை PMU செலுத்தியிருந்தது. ஆகவே அரசாங்கத்தின் கொள்கையுடன் இணங்கி நடக்காது PMU அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | உடன்படவில்லை. குறைந்த எண்ணிக்கையுடனான பதவியினர் 2023-03-31 ஆந் திகதி வரையும் தொடர்ந்து செயற்பட்டனர். கடனின் சமரச பேச்சு வெற்றியளிக்கும் எனவும் செயற்திட்டம் விரைவாக மீள ஆரம்பிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே பிரிவு அலுவலகம் குறைந்த எண்ணிக்கையான பதவியினர்களுடன் செயற்பட்டது. | 2023 மார்ச் 31 ஆந் திகதியின் பின்னர் முறையான அங்கீகாரம் இல்லாது PMU தொடர்ந்து செயற்படாதிருத்தல் வேண்டும். |